**சுருக்கம்**

மாற்றுத் திறனுடையோர் நலன் – மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையம் மூன்றாண்டு திட்டமாக அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடங்க மற்றும் ரூ.38,38,000/– செலவினம் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.திந.2)துறை

அரசாணை(நிலை) எண்.1 நாள்:21.04. 2010

சித்திரை 8, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண். 114, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22.8.2008.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க. எண். 8238/ஆர்3–1/2008, நாள் 29.4.09 மற்றும் 17.8.09.

–––––––

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற் பயிற்சி மையம் மூன்றாண்டு திட்டமாக அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.8.2008 அன்று அறிவித்தார்கள். அதன்படி மேலே–1ல் படிக்கப்பட்ட அரசாாணயில் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற் பயிற்சி மையம் மூன்றாண்டு திட்டமாக அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது. 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாற்றுத் திறனாளிகள் எண்ணிக்கை அதிகமாக உள்ள மாவட்டங்களில் முதற்கட்டமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், தருமபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி தூத்துக்குடி மற்றும் சிவகங்கை ஆகிய 12 மாவட்டங்களில் தொழிற் பயிற்சி மையங்களை ரூ.75,74,000/– (ரூபாய் எழுபத்து ஐந்து இலட்சத்து எழுபத்து நான்காயிரம் மட்டும்) செலவினத்தில் அமைப்பதற்கான கருத்துருவினை மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார். (தொழிற் பயிற்சி மையங்களை அமைக்க ரூ.72.74 இலட்சங்கள் மற்றும் இந்த தொழிற்பயிற்சி மையங்களில் தொழிற்பயிற்சி வழங்குவதை கண்காணிக்க ரூ. 3.00 இலட்சங்கள்)

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்த பின்னர் மாற்றுத் திறனாளிகளின் வேலைவாய்ப்பு பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையங்களை முதற்கட்டமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், தருமபுரி, ஈரோடு, கோயம்புத்தூர்,

திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி தூத்துக்குடி மற்றும் சிவகங்கை ஆகிய 12 மாவட்டங்களில் அமைக்கவும் சென்னை, மதுரை, காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்கள் பெரிய மாவட்டங்கள் என்பதால் இம்மாவட்டங்களில் கூடுதலாக ஒன்றுக்கு மேற்பட்ட தொண்டு நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிக்க இவ்வாணையின் இணைப்பு–I ல் கண்டுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் இணைப்பு–II ல் கண்டுள்ளபடி ரூ. 38,38,000/– (ரூபாய் முப்பத்து எட்டு இலட்சத்து முப்பத்து எட்டாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

" 2235–சமூக பாதுகாப்பும் நலனும் –02–சமூக நலன் –001 –நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது– AF இயலாமையுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்–72 பயிற்சி''.

( த.தொ.கு. 2235 02 001 AF 72 08)

4. இச்செலவினத்திற்கான நிதி 2010–11–ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். 2010–11 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2010–11–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 174/JS(APA)/2010 நாள் 15.4.2010 இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 06(ஆறு).

( ஆளுநரின் ஆணைப்படி)

சோ. சு . ஜவஹர்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–9/18/35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
( மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (சமூக நலம்)த்துறை, சென்னை–9/ நிதி (வ.செ.பொது II)த் துறை, சென்னை–9.
சமூக நலத் (சந 2)துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

**(G.O.(Ms) No. 1, Welfare of Differently Abled Person Department, dated 21.4.2010)**

## ANNEXURE

The details of recommended expenditure (approximately) and the Vocational Training to be given are as follows:

| S. No. | District | Name of the NGO. | Vocational Training to be given | Category of disable persons | No. of disabled beneficiaries | Duration of period |
|---|---|---|---|---|---|---|
| 1. (i) | Chennai | Andhra Mahila sabha, adyar, Chennai. | Computer training, Desk Top Publishing, Call Centre | Orthopaedically handicapped | 30 | 6 months |
| (ii) | Chennai | Padma Vertical solutions Pvt. Ltd., Chennai-6. | Silver polishing and Silver Articles manufacturing | Orthopaedically handicapped Hearing Impaired, Partially Blind | 20 | 6 months |
| 2 (i) | Madurai | Indian Association of the Blind Sudarajanpatti Madurai | Light engineering Project, Computer Training | Visually Handicapped | 20 | 6 months |
| (ii) | Madurai | Helen Keller Service Society for the Blind, Madurai | Desk Top Publishing | Orthopaedically handicapped | 20 | 6 months |
| 3. | Vellore | Worth Trust, Katpadi, Vellore | Light Engineering Project, Card Board making | Hearing Impaired and Mentally Retarded | 20 | 6 months |
| 4. | Thiruvallur | Balavihar Training School, Veppampattu, Thiruvallur. | Typewriting and Weaving | Orthopaedically Handicapped and Mentally Retarded | 20 | 6 months |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | Coimbatore | Cheran Region Christain Society . Coimbatore | Screen Printing, Acra leaf plate making, Secretarial project | Hearing Impaired<br>Visually Handicapped<br>Orthopaedically Handicapped | 10<br>10<br>10 | 6 months |
| 6. | Tirunelveli | School for the Blind, Palayamkottai, Tiruvelveli | Printing, Composing and Book binding | Hearing Impaired, Visually Handicapped and Orthopaedically Handicapped | 30 | 6 months |
| 7. | Trichy | Spastic Society of Tiruchirapalli (SPASTI), Trichy. | Card board box making. File making, Paper cup making. | Cerebral palsied and Mentally Retarded | 20 | 6 months |
| 8. | Erode | AWARD. Dharapuram, Erode | a) Envelope making<br>b) Cotton / Coir making<br>c) Tailoring<br>d) Computer Training | Orthopaeducally Handicapped, Hearing Impaired and Mentally Retarded | 20 | 6 months |
| 9. | Dharmapuri | Mercy Home, Sogathur Cross Road, Dharmapuri | Dairy Farms and Emu Birds | Orthopaedically Handicapped and Hearing Impaired | 20 | 6 months |
| 10 (i) | Kanchipuram | Life Help Centre, Palavakkam, Chennai. | Electronic and Home Appliances repairing course | Orthopaedically Handicapped and Hearing Impaired | 20 | 6 months |
| (ii) | Kanchipuram | Dr. M.G.R. School for the Deaf, Chennai. | Beautician course | Hearing Impaired (Ladies only) | 10 | 6 months |
| 11. | Thoothugudi | Lucia Society for the Blind and other Disabled, Meelavittan Post, | 1. Computer<br>2. Cell Phone Service<br>3. Mixie and Wet | Orthopeadically Handicapped | 50 | 6months |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Thoothugudi District. | Grinder servicing<br>4. Fridge Servicing<br>5. Tailoring<br>(5 trades) | | | |
| 12. | Sivagangai | Trust of Handicapped Humanitarian Assistance of India (THAI Trust) 4/137, SIPCOT, Manamadurai, Sivagangai District. | 1. Candle making<br>2. Terracota<br>3. Bathi manufacturing. | Orthopeadically Handicapped | 30 | 6months |
| | | | **Total** | | **360** | |

S.S. Jawahar,
Secretary to Government.

// Forwarded by order //

Section Officer.

**(அரசாணை (நிலை) எண்.1, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 21.4.2010ன் இணைப்பு)**

**<u>இணைப்பு—II</u>**

**<u>தொடர் செலவினம் :</u>**

| | |
|---|---|
| **<u>உணவுச் செலவினம்</u>**<br>ரூ.550.00 x 6 மாதங்கள் x 360 பயனாளிகள் | ரூ. 11,88,000/— |
| **<u>பணியாளர் செலவினம்</u>**<br>ரூ.10,000/— x 6 மாதங்கள் x 15 மையங்கள் | ரூ. 9,00,000/— |
| **<u>விடுதி செலவினம்</u>**<br>ரூ.2500/— x 6 மாதங்கள் x 15 மையங்கள் | ரூ. 2,25,000/— |
| **<u>இதர செலவினம்</u>**<br>ரூ.5000/— x 15 மையங்கள் | ரூ. 75,000/— |
| | ரூ. 23,88,000/— |

**<u>தொடரா செலவினம் :</u>**

| | |
|---|---|
| **இயந்திரங்கள்**<br>ரூ.1,00,000/—x 14 மையம்<br>ரூ. 50,000/— x 1 மையம் | ரூ. 14,50,000/— |
| **மொத்தம்** | **ரூ. 38,38,000/—** |

(ரூபாய் முப்பத்து எட்டு இலட்சத்து முப்பத்து எட்டாயிரம் மட்டும்)

சோ. சு. ஜவஹர்
அரசு செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**இணைப்பு**

(விடுதியுடன் கூடிய தொழிற் பயிற்சி மைங்கள் அமைக்க செலவின விவரம்)

| | | |
|---|---|---|
| வயது வரம்பு | : | 18–35 வருடங்கள் |
| பயிற்சி காலம் | : | 6 மாதங்கள் |
| ஊனமுற்றோர் எண்ணிக்கை | : | 40 (அனைத்து வகை ஊனமுற்றோர்) |

**தொடர் செலவினம்** **மொத்தம்**

| | | |
|---|---|---|
| பயிற்சி பெறும் ஊனமுற்றோருக்கு ஊனவூட்டு மான்யம் (நபர் ஒருவருக்கு ) 1500 x6 | ரூ. 9000 x 40 | (40 x 9000) 36,00,000/– |
| **நிறுவனத்திற்கு** பயிற்சியளிப்பவர்க்கு சம்பளம் (ரூ. 5000 x6) | ரூ.5000 x 6 | 30,000/– |
| **சில்லரைச் செலவினம்** | | |
| இரு ஒருங்கிணைப்பாளர்களுக்கு சம்பளம் | ரூ 5000 x 6 x2 | 60,000/– |
| தளவாடங்கள் வாங்க | | ரூ1,00,000/– |
| தங்கும் விடுதிக்கான இதர செலவினம் | ரூ 3000 x 6 | 18,000/– |

| | | |
|---|---|---|
| தொடர் செலவினம் | : | ரூ. 1,13,000/– |

| | | |
|---|---|---|
| தொடரா செலவினம் | : | ரூ. 1,00,0000/– |
| மாணவர்களுக்கு உணவூட்டு மான்யம் 40x9000 | : | ரூ. 3.60.000/– |
| மொத்தம் | | ரூ. 5,73,000/– |